# 15

# சத்தியத்தை பேசிய ஒரு மனிதன்

## [2 இராஜாக்கள் 6:24–7:20]

*சத்தியம், உலகின் மிகவும் விலையுயர்ந்த பொருட்களில் ஒன்றாக இருக்கிறது. சாலொமோன், "சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே" என எழுதினார் (நீதிமொழிகள் 23:23). எவ்வளவு விலை பெற்றாலும், சில காரியங்கள் விற்பனைக்கு உரியவைகள் அல்ல; அவைகளில் ஒன்று சத்தியம். டபிள்யு. ஜெ. டீன் மற்றும் எஸ். டி. டெய்லர் - டாஸ்வெல் என்பவர்கள்,*

> *சத்தியத்தை மிக விலையுயர்ந்த காரியமாக கருது, அதை அடைவதற்கு எந்த வித வலியானாலும், விலையானாலும் அல்லது தியாகமானாலும் அதை செய், அதை அடைந்த பின் பத்திரமாய் பாதுகாத்துக் கொள்; அதை உலக ஆதாயத்திற்காக, அல்லது சிற்றின்பத்திற்காக விற்று விடாதே, அதற்கு அப்பால் சிந்தியாதே, அதை பார்த்து நகைத்துவிடாதே, "விற்று விடாதே" எந்த ஒரு சுய நலகாரியத்திற்காகவும் அதை விட்டுப் பிரிந்துவிடாதே.[1] என கருத்து தெரிவித்தனர்.*

*இயேசுவானவர் சத்தியத்தின் விலை மதிப்பை குறித்து பேசுகையில், "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என வலியுறுத்திப்போதித்தார் (யோவான் 8:32).*

*எல்லா உண்மையும் விலையேறப்பெற்றது தான் (காண்க எபேசியர் 4:25), ஆனால் நாம் தேவனுடைய வார்த்தையாகிய சத்தியத்தை மையமாக கொண்டு இந்த பாடத்தில் படிக்கப்போகிறோம். சங்கீதக்காரன் கர்த்தரை நோக்கி, "உமது கற்பனைகளெல்லாம் உண்மை" என்றான் (சங்கீதம் 119:151; காண்க 2 சாமுவேல் 7:28; சங்கீதம் 119:160). யோவான் 17ஆம் அதிகாரத்திலுள்ள இயேசுவின் ஜெபத்தில், அவர், "உம்முடைய வசனமே சத்தியம்" என்றார் (யோவான் 17:17; காண்க 2 கொரிந்தியர் 6:7; கலாத்தியர் 2:5; கொலோசெயர் 1:5; 2 தீமோத்தேயு 2:15; யாக்கோபு 1:18). நாம் சத்தியத்தை "வாங்க வேண்டும்" மற்றும் ஒரு போதும், ஒரு போதும், ஒரு போதும், "அதை விற்கக்கூடாது"!*

*இந்த பாடத்தின் தலைப்பு "சத்தியத்தைப் பேசின ஒரு மனிதன்." நமது வசனப்பகுதி 2 இராஜாக்கள் 6ஆம் அதிகாரத்தின் கடைசி பகுதியும் 7ஆம் அதிகாரம் முழுவதுமாகும். எலிசாவின் வாழ்க்கை தொடர்பான எல்லா துணை நிகழ்வுகளையும் பரிசுத்த ஆவியானவர் ஏன் வெளிப்படுத்தியிருக்கிறார் என்பது நமக்கு நிச்சயமாக தெரிவதில்லை. ஆனால் அவர் இந்த பாடத்தை குறித்த ஒரு சந்தேகத்தில் நம்மை விட்டு விடவில்லை. 2 இராஜாக்கள் 7:18-20 ஆகிய வசனங்களை கவனியுங்கள்! மேலோட்டமாக, இவை திரும்ப திரும்ப*

*சொல்லப்படுவதாக தோன்றலாம். ஆனால், பரிசுத்த ஆவியானவர் இதை வாசிப்போர் இதின் மையகருத்தை தவற விட்டுவிடக்கூடாது என்பதை உறுதி செய்ய விரும்பினார். "தேவனுடைய மனுஷன் ... சொன்னதின்படியே நடந்தது" (7:18ஆ) என்ற திறவுகோல் வசனத்துடன் இந்த சுருக்கமான பகுதி துவங்குகிறது. மனிதர்கள் எலிசாவின் வசனத்தை குறித்து கேள்வி எழுப்பமுடியும், சந்தேகிக்க முடியும். அல்லது அவைகளை அசட்டை செய்யவும் கூடும், ஆனால் எலிசா தேவனுடைய சத்தியத்தை பேசினார் - தேவனுடைய சத்தியம் எப்போதும் உண்மையாயிருக்கிறது!*

*நமது வசனப் பகுதி நீண்ட ஒரு வசனப்பகுதியாய் இருப்பதால், நாம் இதை இரண்டு பாடங்களில் படிப்போம். இந்த பாடம் சத்தியம் தொடர்பான ஒட்டுமொத்தமான மற்றும் முக்கியமான குறிப்புகளை வழங்கும்.*

## சத்தியத்தை அசட்டை செய்வது, சத்தியத்தை மாற்றுவதில்லை *(6:24-29)*

**சோகசம்பவம்: நிஜமானது**

*"இதற்குப் பின்பு, சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத் தன் இராணுவத்தையெல்லாம் கூட்டிக்கொண்டுவந்து, சமாரியாவை முற்றிகைபோட்டான்" (வசனம் 6:24) என்ற வசனத்துடன் நமது கதை/பாடம் துவங்குகிறது. "இதற்குப் பின்பு" என்பது வசனம் 23ஐ குறிக்கிறது: "... சீரியாவின் தண்டுகள் இஸ்ரவேல் தேசத்திலே அப்புறம் வரவில்லை." ஒரு குறிப்பிட்ட சமாதான காலத்திற்கு பிறகு (எவ்வளவு காலம் என்பது நமக்கு தெரியவில்லை), பெனாதாத் இஸ்ரவேலுக்கு எதிராக ஒரு பெரிய தாக்குதலை தொடுத்தான். அவனுடைய இராணுவம் இஸ்ரவேலின் இராஜா அரண்மனை அமைந்திருந்த சமாரியாவரை முன்னேறி சென்றது. இந்த சமயத்தில், யோராம் அநேகமாக இஸ்ரவேலின் ராஜாவாக இருந்திருக்கலாம். ஜொசிபஸ் என்பவருடைய கூற்றுபடி, யோராமுடைய படைகள் பெனாதாத்தின் படைகளை எதிர்கொள்ள வலிமையற்றதாக இருந்தபடியால், அவன் பெனாதாத்தை திறந்த வெளிகளில் சந்திக்க பயப்பட்டான். அவன் போர் ஆபத்தை தவிர்த்து உடனே தலைநகருக்குள் தன்னை ஒளித்துக்கொண்டான்.*[2]

*சீரியர்கள் பட்டணத்தை முற்றுகையிட, "... சமாரியாவிலே கொடிய பஞ்சமுண்டாயிற்று" (வசனம் 25அ). இது 4:38 மற்றும் 8:1 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டுள்ள பஞ்சத்தை குறிக்கக்கூடும், அல்லது முற்றுகையின் போது, பட்டணத்தின் குடிமக்களுக்கு உணவு இல்லாமல் போயிற்று என்பதை குறிக்கலாம். எப்படியிருப்பினும். பெனாதாத்தின் யுக்தி, பட்டினியால் பட்டணத்தை பணியவைப்பதாக இருந்தது.*

*குடிமக்கள் நம்பிக்கை இழக்கும் வரை, முற்றுகை நாட்கணக்கில் வாரக்கணக்கில் நீடித்தது. "ஒரு கழுதைத்தலை எண்பது வெள்ளிக்காசுக்கும் [இரண்டு பவுண்ட் சில்வர்*[3]*], புறாக்களுக்கு போடுகிற காற்படி பயறு ஐந்து வெள்ளிக் காசுக்கும் [இரண்டு அவுன்சுகள்] விற்கப்பட்டது" (6:25ஆ). பிரமாணத்தின்படி, கழுதை ஒரு அசுத்தமான விலங்கு, இஸ்ரவேலர்கள் அதை புசிக்கக்கூடாது (காண்க லேவியராகமம் 11:2-8; உபாகமம் 14:4-8). செத்துப்போன உடலின் உறுப்புகளில், கழுதையின் தலை என்பது விரும்பப்படாத ஒரு பகுதி*

*யாகவும் சிறிதளவே தசை உள்ளதாகவும் இருக்கும். இருப்பினும், அது அதிக விலைக்கு போனது.*

*"ஒரு காற்படி பயறு" என்பது அநேகமாக 12 அவுன்சாக இருந்தது.*[4] *"புறாகழிவு"* (NASB) *என்பது நேரடிப் பொருளில் எடுத்துக்கொள்ளப்படக் கூடும், ஏனெனில் பயங்கரமான பஞ்சகாலங்களில் புறாக்கழிவுகள் மனிதர் உண்ணுதவற்காக சேகரிக்கப்பட்டுள்ளன ... ;*[5] *ஆனால் அது துர்பாக்கியமான உணவைக்குறிப்பதற்காக உருவகமாகவும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.*[6] *சூழ்நிலை மோசமாயிருந்தது - மனித பயன்பாட்டிற்கு பொருத்தமில்லாதவைகள் என்று கருதப்பட்டவைகள் கூட - செல்வந்தர்களால் மட்டுமே வாங்கமுடியும் என்ற அளவுக்கு - நிலை மோசமாக இருந்தது.*

*மிகமோசமான நிலை இனிமேல்தான் வரவேண்டியதாயிருந்தது. ஒரு நாள் யோராம், எதிரிகளின் நடமாட்டத்தை கண்காணிக்கவும் பாதுகாப்பு அரண்களை மேற்பார்வையிடவும் அலங்கத்தின் மேல் நடந்து கொண்டிருந்தான் (2 இராஜாக்கள் 6:26அ). அப்படி அவர் செய்த போது, ஒரு ஸ்திரீ அவனை பார்த்து, "இராஜாவாகிய என் ஆண்டவனே, இரட்சியும்!" என்று கூறினாள் (வசனம் 26ஆ). அவளுக்கு உணவு தேவைப்பட்டது என்பதை ராஜா யூகித்துக்கொண்டார். அதற்கு அவன், "கர்த்தர் உன்னை இரட்சிக்காதிருந்தால் நான் எதிலிருந்து எடுத்து உன்னை இரட்சிக்கலாம்? களஞ்சியத்திலிருந்தா, ஆலையிலிருந்தா?" என்றான் (வசனம் 27).* NCV *மொழிபெயர்ப்பு, "கர்த்தர் உனக்கு உதவி செய்யாவிட்டால், நான் எப்படி செய்யக்கூடும்? களஞ்சியத்தி லிருந்து [அங்கே தானியம் இருக்க வில்லை] அல்லது ஆலையிலிருந்து [அங்கே திராட்சைரசம் இருக்கவில்லை] நான் உதவி பெற முடியுமா?" எனக் கூறுகிறது.*

*ராஜா இறுதியாக அந்த ஸ்திரீயை நோக்கி, "உனக்கு என்ன வேண்டும்?" என்றான் (வசனம் 28அ).* (NIV*இல் "என்ன காரியம்?" என சுறுக்கமாக கூறப்பட்டுள்ளது.) அந்த பெண்ணுக்கு உணவுமட்டுமல்ல, அவள் எதை "நியாயம்" என்று நினைத்தாளோ அதுவும் தேவைப்படுவதாக காணப்பட்டது. அவளுடைய கதையை நான் (குழந்தைகளை தவறாக நடத்தும் கதைகள் என்னை சரீரத்தில் வியாதிப்படவைக்கிறது) விட்டு விட விரும்புகிறேன், ஆனால் அது அந்த பட்டணம் சந்தித்த சொல்லொண்ணா துயரத்தை விளக்குகிறது.*

> *அதற்கு அவள், "இந்த ஸ்திரீ என்னை நோக்கி: உன் மகனைத் தா, அவனை இன்று தின்போம்; நாளைக்கு என் மகனைத் தின்போம் என்றாள். அப்படியே என் மகனை ஆக்கித் தின்றோம்; மறுநாளில் நான் இவளை நோக்கி; நாம் உன் மகனைத் தின்ன அவனைத் தா என்றேன்; அவள் தன் மகனை ஒளித்து விட்டாள்" என்றாள் (வசனங்கள் 28ஆ, 29).*[7]

*இது தேவனுடைய ஜனங்கள் மனித உடலைத் தின்ற முதல் குறிப்பாக இருக்கிறது. இப்படிப்பட்ட கொடுமை, நெபுகாத்நேச்சார் கி.மு. 587ல் எருசலேமை முற்றுகையிட்டபோதும் நடந்தது. (காணவும் புலம்பல் 2:20; 4:10; எசேக்கியேல் 5:10) ஜெசிபஸ் என்பவர், தீத்து ராயன் கி.பி. 70இல் எருசலேமை இறுதியாக முற்றுகையிட்டபோது மனிதர் தரந்தாழ்ந்து நடந்துகொண்ட விதங்களை எழுதியுள்ளார்.*[8]

### சோகசம்பவம்: அதின் காரணம்

*எது காரியங்களை இந்த அளவு மோசமாக்கியிருந்தன? முற்றுகை, கடும் பஞ்சம் மற்றும் பயங்கர பின்விளைவுகள் யாவும் பாவம் மற்றும் விக்கிரக ஆராதனை ஆகியவற்றால் உருவாயிருந்தன. மக்கள் தேவனோடு தங்களுக்குள்ள உடன்படிக்கையை கைக்கொள்ள தவறிவிட்டார்கள். மோசே, இஸ்ரவேலர் தங்கள் உடன்படிக்கையைக் கைக்கொள்ளத் தவறினால், அவர்களுடைய சத்துருக்கள் அவர்கள் பட்டணங்களை முற்றுகைபோடுவார்கள் என எச்சரித்திருந்தார் (உபாகமம் 28:52). மேலும், "உன் சத்துருக்கள் உன்னை முற்றுகைபோட்டு, நெருக்குங்காலத்தில், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த உன் கர்ப்பக்கனியான உன் புத்திர புத்திரிகளின் மாம்சத்தை தின்பாய்" என எச்சரித்திருந்தார் (வசனம் 53). மறுபடியுமாக, மோசே ஜனங்களுக்கு தேவனுடைய செய்தியைக் கொடுத்திருந்தார்:*

> *"... இன்னும் இவைகளெல்லாவற்றாலும் நீங்கள் எனக்குச் செவிகொடாமல், எனக்கு எதிர்த்து நடந்தால், நான் உக்கிரத்தோடே உங்களுக்கு எதிர்த்து நடந்து, நானே உங்கள் பாவங்களினிமித்தம் உங்களை ஏழத்தனையாய்த் தண்டிப்பேன். உங்கள் குமாரரின் மாம்சத்தையும் உங்கள் குமாரத்திகளின் மாம்சத்தையும் புசிப்பீர்கள்" (லேவியராகமம் 26:27-29).*

*சமாரியாவின் மக்கள் தேவனுடைய சத்தியத்தை புறக்கணித்துவிட்டார்கள், ஆனால் அது சத்தியத்தை மாற்றியிருக்கவில்லை. அவர்கள் இன்னமும் அதின் பின்விளைவுகளை அனுபவிக்க வேண்டியவர்களாயிருந்தார்கள். ஓசியா தீர்க்கதரிசி, "அவர்கள் காற்றை விதைத்து, சூறைக்காற்றை அறுப்பார்கள் ..." என்றார் (ஓசியா 8:7அ). பவுல், "... மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" என்று எழுதினார் (கலாத்தியர் 6:7ஆ).*

*இன்று, தேவனுடைய வார்த்தையின் சத்தியத்தைப் புறக்கணிக்கிற மக்கள் உலகத்தில் நிறைந்திருக்கிறார்கள். சிலர் தேவனுடைய வசனம் தங்களுக்கு போதிக்கப்படாததால் அப்படி செய்கிறார்கள்; மற்றவர்கள் பிடிவாதமாக அறியாமையில் இருப்பதால் அப்படிசெய்கிறார்கள். வேதாகமம் முக்கியமானதல்ல, மற்றும் அதின் போதனைகளுக்கு கீழ்ப்படிவது என்பது சிறிதளவே முக்கியத்துவமுள்ளது என்பது சாத்தானுடைய பொய்களில் ஒன்றாக உள்ளது. சத்தியத்தை புறக்கணிப்பது பின்விளைவுகளை கொண்டுவருகிறது - பயங்கரமான பின்விளைவுகளை கொண்டுவருகிறது என்பதை சமாரியாவின் விவரிக்க முடியாத சூழ்நிலைகளை பார்த்தாவது கற்றுக்கொள்ளுங்கள். பவுல் அப்படிப்பட்டவர்களைக் குறித்து, "அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து, ..." என்று எழுதினார் (எபேசியர் 4:18). நீங்கள் வேதாகமத்தின் தெளிவான போதனைகளை நிராகரிக்கிறவர்களாக இருந்திருந்தால், சத்தியத்தை புறக்கணிப்பது என்பது, சத்தியத்தை மாற்றுவதில்லை என்பதை நீங்கள் கற்றுக்கொள்ளும்முன், பாவம் உங்கள் வாழ்க்கையை அழிக்காமல் இருக்க வேண்டுமென நான் ஜெபிக்கிறேன்!*

# *சத்தியத்தின்பால் கோபப்படுவது சத்தியத்தை மாற்றுவதில்லை (6:30-33)*

***ராஜாவின் நம்பிக்கையின்மை***

*“அந்த ஸ்திரீயின் வார்த்தைகளை ராஜா கேட்டவுடனே” அவன் நம்பிக்கையற்றவனாகி, ‘தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டான்” (வசனம் 30அ; ஒப்பிடுக 5:7). அவன் அலங்கத்தின் மேல் இருந்தபடியால், அவனுடைய செய்கைகள் கீழே இருந்தவர்களுக்கு காணக்கூடியதாயிருந்தது (வசனம் 30ஆ). “அவன் உள்ளே தன் சரீரத்தின் மேல் இரட்டு உடுத்தியிருக்கிறதை ஜனங்கள் கண்டார்கள்” (வசனம் 30இ).*

*இரட்டு என்பது விலைமலிவான நூல் இழைகளால் நெய்யப்பட்டதாயும் சாக்குப்பைகளை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டதாயும் இருந்தது. நான் சிறுவனாயிருந்தபோது அந்த வகை துணியை “burlap” என அழைப்போம். இவற்றிலிருந்து உருவான சாக்குகளை நாங்கள் “கோணி பைகள்”[9] என அழைப்போம். பொதுவாக சாக்கு இழைகளிலிருந்து உடைகள் தயாரிக்கப்படுவதில்லை, ஏனெனில் அதின் பருமனான இழைகள் தோலில் எரிச்சல் உண்டாக்கக்கூடியதாக இருக்கும். வேதாகம காலங்களில், மக்கள் சில சமயங்களில் அதை, தங்கள் மனத்தாழ்மை, துக்கம் மற்றும் மனந்திரும்புதலைக் காண்பிக்கும் அடையாளமாக உடுத்தியிருந்தார்கள் (காண்க ஆதியாகமம் 37:34; 2 சாமுவேல் 3:31; 2 இராஜாக்கள் 19:1).*

*ராஜா ஏன் இப்படி உடுத்தியிருந்தார்? அதற்கு பதிலளிக்க நாம் நம் கதையை பின்னோக்கி பார்க்க வேண்டும். “அந்த விவரிப்பு சுறுக்கமானதாயும் அண்டவடிவமானதாகவும் ... இருக்கிறது,”[10] ஆகவே, நாம் வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். எலிசா முன்னதாக ஏவப்பட்ட ஒரு செய்தியை ராஜாவுக்கு கொடுத்திருந்தார் என யூகிக்கிறோம். அந்த செய்தி நிச்சயமாக இப்படிப்பட்ட சத்தியங்களை உள்ளடக்கியிருந்திருக்கும்:*

- *“உன்னுடைய பிரச்சனைகள், உன் பாவத்திற்கு தண்டனையாக தேவனிடத்திலிருந்து வந்துள்ளன.”*
- *“மக்கள் தங்கள் பொல்லாப்பிலிருந்து (ராஜாவாகிய உம்மிடத்தில் துவங்கி) மனந்திரும்புவார்களானால், கர்த்தர் அவர்களை பாதுகாப்பார்.”*

*எலிசா சீரியா இராணுவத்திடம் சரணடைவதற்கு எதிராகக்கூட புத்தி சொல்லி யிருந்திருக்கலாம்: “கொஞ்சம் காத்திருங்கள் மற்றும் கர்த்தர் உங்களை விடுதலையாக்குவார்.”*

*ராஜா, தன் மனந்திரும்புதலின் அடையாளமாக ஏன் இரட்டு உடுத்தி யிருந்தார் என்பதற்கு இவ்விதமான ஒரு செய்தி விளக்கமளிக்கிறதாயிருக்கிறது. இதில் என்னதான் தவறு இருந்தது? தொடர்ந்து வரும் சம்பவங்களை கவனிக்கும் போது, அவன் ஒரு சிறிதளவு கூட மனந்திரும்பவே இல்லை என்பதை காட்டுகிறது: அவன் தன் பாவம் மற்றும் அவைகளின் பின்விளைவுகளுக்கு தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்கவில்லை. பாவத்தைக் குறித்து உள்ளான மற்றும் இருதயப்பூர்வமான துக்கம் ஏற்படாத பட்சத்தில், மனந்திரும்பி விட்டதாக காட்டிக்கொள்ளும் வெளிப்புற சைகைகள் வெறுமை மற்றும் அர்த்த*

மற்றவைகளாயுள்ளன. (ஒரு சிறுவன் தன் தவறுக்காக உண்மையில் வருந்தாத நிலையில், அவன் தாய் என் சொல்லுக்காக வருந்துகிறேன் என சொல்ல வைப்பதால், "நான் வருந்துகின்றேன்" என முணுமுணுக்கும் ஒரு சிறுவனுடைய நிகழ்ச்சி என மனதிற்கு வருகிறது.)

இந்த பெண்ணின் பயங்கரமான கதை இந்த ராஜாவின் எண்ணத்தை மேற்கொண்டது. "இதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை! என்னுடைய ராஜா வஸ்திரத்திற்கு அடுத்து இந்த அரிப்பை உருவாக்குகிற துணியை நான் உடுத்தியிருக்கிறேன். இருப்பினும் கர்த்தர் எங்களை காப்பாற்றவில்லை. உண்மையில் நிலமை ஒவ்வொரு நிமிஷமும் மோசமாகிக்கொண்டே வருகிறது," என அவன் சிந்திப்பதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது.

### ராஜாவின் தீர்மானம்

ராஜா என்ன செய்தான்? "நாம் தாண் மற்றும் பெத்தேலிலுள்ள விக்கிரகங்களை அகற்றிவிட்டு [காண்க 1 இராஜாக்கள் 12:28, 29], பாகாலின் வழிப்பாட்டை முழுமையாக அழித்துவிட்டு, யெகோவாவாகிய தேவனை மட்டும் தொழுதுகொள்ள வேண்டும் என அவன் தீர்மானித்தானா?" அவன் தன் மக்கள் மனந்திரும்பி, ஜெபிக்கும்படி கேட்டிருந்தால், கர்த்தர் அவர்களை ஆசீர்வதித்திருப்பார் (காண்க 2 நாளாகமம் 7:14). அப்படியாக முடிவெடுத்து, செயல்படுவதற்கு பதிலாக, யோராம் ஊழியர்மேல் கோபம் கொண்டவனாக மாறினான். அவன் "சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவின் தலை இன்றைக்கு அவன் மேல் இருந்தால், தேவன் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமா கவும் எனக்குச் செய்யக்கடவர்" என்று சொன்னான் (2 இராஜாக்கள் 6:31) [அவனுடைய தாயின் வார்த்தைகளோடு ஒப்பிடுக (1 இராஜாக்கள் 19:2)], முன்னதாக, ராஜா எலிசாவை, "தகப்பனே" என அழைத்து அவன் ஆலோசனைக்கு செவிகொடுத்துவந்தான் (வசனங்கள் 21, 22, 23), ஆனால் இப்போது அவன் சாகவேண்டுமென்று விரும்பினான். தீர்க்கதரிசியின் தலை, "இஸ்ரவேல் எல்லா வற்றிலும் மிகவும் குற்றமற்றதும் விலைமதிப்பற்றதுமாயிருந்தது,"[11] ஆனால் ராஜா அதை அவன் உடலில் இருந்த எடுத்துவிட தீர்மானித்திருந்தான்.

அநேகமாக, எல்லா ஆபத்துகளுக்கும் (எலியாவுக்கு அவனுடைய தகப்பனின் வார்த்தைகளை கவனியுங்கள் [1 இராஜாக்கள் 18:17]), ராஜா எலிசாவை பொறுப்பாளியாக்கியிருந்தான். எலிசாவின் அறிவுரைகள் தவறானவைகள் என்றும் அந்த அற்புதங்களைச் செய்யும் தீர்க்கதரிசி, அவன் செய்து கொண்டிருப்பவைகளைவிட அதிகமானவற்றைச் செய்திருக்க வேண்டும் எனவும் அவன் எதிர்பார்த்தானா? ராஜா உணர்ச்சிவசப்பட்டு, கையில் அகப்பட்ட இலக்குகளை தாக்கிக் கொண்டிருந்தானா? காரணம் எதுவாக இருந்தாலும், தேசத்தின் பிரச்சனைகளுக்கான பொருப்பை ஏற்றுக்கொள்வதற்கு பதிலாக, ராஜா கோபப்பட்டு, இன்னொருவர்மேல் பழிபோடுவதை சுலபமானதாக கருதினார்.

யோராம் ஒரு கொலைகாரனை கூப்பிட்டு அனுப்பினான். அவன் அந்த மனிதனிடத்தில் எலிசா சமாரியாவின் எங்கு வாழ்ந்தான் என்ற தகவலையும் அவனை கொலை செய்ய வேண்டும் என்ற கட்டளையும் கொடுத்தான் (2 இராஜாக்கள் 6:32ஆ). கொலைகாரன் புறப்பட்டு சென்றவுடனே வேலை சரியாக முடிவதை உறுதிசெய்வதற்கு ராஜா தானும் எலிசாவின் வீட்டிற்கு செல்ல

*விரும்பினான் (வசனம் 32ஈ),*[12] *அவன் தன் அரச பிரதானிகளில் ஒருவனோடு சென்றான் (7:2).*

*அதே நேரத்தில், எலிசா தன் வீட்டில் "மூப்பர்களோடு" - பட்டணத்தின் தலைவர்களோடு பேசிக்கொண்டிருந்தான் (6:32அ). இந்த மனிதர்கள் அரசரோடு இல்லாமல், தீர்க்கதரிசியோடு இருந்தது கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு காரியமாயிருக்கிறது. அநேகமாக, அவர்கள் ஆலோசனை அல்லது ஆறுதலை பெற முயற்சித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் ஒருவேளை ஒரு ஜெபக்கூட்டத்தில் கூட தங்களை ஈடுபடுத்திக்கொண்டிருந்திருக்கலாம்.*

*கர்த்தர், எலிசாவை ராஜாவின் கொலை முயற்சி திட்டத்தைக் குறித்து எச்சரித்தார். தீர்க்கதரிசி இந்த தெய்வீக அறிவுறுத்தலை மூப்பர்களுக்கு தெரியப்படுத்தினான்: அவன் "என் தலையை வாங்க, அந்த கொலைபாதகனுடைய மகன் ஆள் அனுப்பினான் பார்த்தீர்களா?" என்றான் (வசனம் 32இ). "இன்னாருடைய மகன்" என்ற வார்த்தையானது, "அந்த சுபாவம் உள்ளவனாக இருக்கிறான்'' என்பதை குறிப்பிடுவதற்கு வேதாகமத்தில் அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே "இந்த கொலைபாதகனுடைய மகன்" என்பது "இந்த கொலைகாரன்" என பொருள்படக்கூடும். எப்படியிருப்பினும், இந்த சம்பவத்தில் ராஜா தாமே கொலைபாதகனின் மகனாக* இருந்தார். *அவனுடைய தகப்பனாகிய ஆகாப் நாபோத்தின் கொலையில் ஈடுபட்டிருந்தார் (காண்க 1 இராஜாக்கள் 21:8-14), மேலும், தேவனுடைய தீர்க்கதரிசிகள் பெருமளவில் கொலை செய்யப்பட்டதிலும் அவன் ஈடுபட்டிருந்தான் (காண்க 1 இராஜாக்கள் 18:13). யோராம், சுபாவத்திலும் வம்சவழியிலும் ஒரு "கொலைகாரனின் மகனாக" இருந்தான்.*[13]

*எலிசா மூப்பர்களை நோக்கி, "அந்த ஆள் வரும்போது, நீங்கள் அவனை உள்ளே வரவொட்டாமல் கதவைப்பூட்டிப்போடுங்கள்; அவனுக்குப் பின்னாக அவன் ஆண்டவனுடைய காலின் சத்தம் கேட்கிறது அல்லவா?" என்றான் (2 இராஜாக்கள் 6:32ஈ). ராஜா அங்கு வருகிறவரையில், கொலைகாரன் உள்ளே வருவதைத் தடுப்பதற்கு அவனுக்கு உதவி தேவைப்பட்டது. அதன்பின் அவன் ராஜாவோடு பேசி அவனை அமைதிபடுத்த முயற்சிப்பான்.*

*எலிசா பேசிக்கொண்டிருக்கையில், ''கொலைகாரன்''*[14] *அங்கு வந்து சேர்ந்தான் (வசனம் 33அ), மூப்பர்களால் அவன் உள்ளேபோக நுழைவதை தடுக்க முடிந்தது ("நான் உள்ளே போக விடுங்கள்! நான் இங்கே ராஜாவின் வேலையாக வந்திருக்கிறேன்!" என்று கூறி அவன் வெளியில் இருந்து கதவை தட்டிய போது, வயதான அவர்கள் பயம் கலந்த உணர்வோடு உள்ளிருந்து கதவை அழுத்திப்பிடித்துக்கொள்வதை நான் காண்கிறேன்).*

*வசனம் 33இன் கடைசிப்பகுதி, "அந்த ஆள் அவனிடத்தில் வந்து: இதோ, இந்த பொல்லாப்பு கர்த்தரால் உண்டானது; நான் இனி கர்த்தருக்காகக் காத்திருக்க வேண்டியது என்ன?" என்று கூறுகிறது. இலக்கண விதிகளின்படி "அந்த ஆள்'' என்பது அந்த செய்தியாளனை/கொலைகாரனைக் குறிக்கிறது. ஆனால் பெரும்பாலான எழுத்தாளர்கள் எலிசாவின் பதிலுரைப்பிலிருந்து அந்த வாக்கியங்கள் ராஜாவினுடையதாயிருந்தது என்று ஒத்துக்கொள்கிறார்கள் (காண்க 7:17ஆ, கவனிக்கவும் வசனம் 1, 2). மொழிபெயர்ப்பில் "இராஜா, இந்த பொல்லாப்பு கர்த்தரிடத்திலிருந்து வந்தது … என்றான்'' என்றுள்ளது.* CJB *மொழிபெயர்ப்பில் "செய்தியாளன் இந்த செய்தியோடு ராஜாவிடமிருந்து*

*வந்தான் ...” என்றுள்ளது.*

*யோராம் மற்றும் அவனுடைய பிரதானி ஆகியோர் அங்கு வந்து சேர்ந்த போது ஆட்சியாளரும் தீர்க்கதரிசியும் சுருக்கமாக பேசிக்கொண்டார்கள். ராஜா கோபமுடையவனாக இருந்தான். அவன் முகம் சிவந்து, கண்கள் விரிந்து அவன் முகநாடிநரம்புகள் துடிப்பதை நான் காண்கிறேன். “இந்த பொல்லாப்பு கர்த்தரால் உண்டானது; நான் இனி கர்த்தருக்காகக் காத்திருக்க வேண்டியது என்ன?” என்று அவன் கத்திய போது அவன் குரலில் ஒரு கர்ஜ்சனை இருந்தது. அவனுடைய குற்றச்சாட்டு இவ்விதமாக இருந்தது. “கர்த்தர் தான் [எங்கள் சொந்த பாவங்கள் அல்ல] எங்கள் பிரச்சனைகளுக்கு காரணமானவர்! எலிசாவே, கர்த்தர் எங்களை விடுவிப்பார் என்று நீ வாக்குறுதிக்கொடுத்தாய், ஆனால் காரியங்கள் மேம்படுவதற்கு பதிலாக, மிகவும் மோசமாகிவருகின்றன. நான் இதுவரை ஒரு பொறுமையான மனிதனாக இருந்தேன். ஆனால் நான் நீண்ட காலம் காத்திருந்துவிட்டேன்!”*

*ராஜா, அந்த சூழ்நிலை மற்றும் தீர்க்கதரிசியின் மேல் மிகவும் கோபம் கொண்டிருந்தான், ஆனால் அது ஒரு தலைவன் என்ற விதத்தில் எல்லா துயரங்களுக்கும் அவன் தான் காரணமாயிருந்தான் என்ற சத்தியத்தை மாற்றி அமைக்கவில்லை. பவுல் கலாத்தியர்களை நோக்கி, “நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொன்னதினாலே உங்களுக்கு சத்துருவானேனோ” என கேட்டார் (கலாத்தியர் 4:16). கத்தோலிக்கத்திலிருந்து மனம்மாறி குணப்பட்ட ஜோ மெலோன் என்பவர் வெளிப்படையாக பேசக்கூடியவர். அவர் ஒரு குறிப்பிட்ட கடினமான கருத்தைக்கூறிய பின், “நான் உங்களுக்கு சத்தியத்தை கூறுவதால் - உங்கள் சத்துரு அல்ல” என கூறுவார்!*

## *சத்தியத்தை குறித்து சந்தேகப்படுவது சத்தியத்தை மாற்றுவதில்லை (7:1-6)*

***வாக்குறுதிகள் அறிவிக்கப்பட்டன***

*ஆபத்து சூழ்ந்திருந்தது. எலிசா சூழ்நிலையை இலகுவாக்காவிட்டால், அவனுடைய தலை சீக்கிரமாக அவன் உடலை விட்டு எடுபட்டுவிடும். நீண்டகாலமல்ல - ஒரே ஒரு நாள் மட்டும் காத்திருந்தால் போதும் - தேவன் காரியத்தை* மாற்றிவிடுவார் *என்ற உறுதியை எலிசா உடனே ராஜாவுக்கு கொடுத்தார். தீர்க்கதரிசி அதை பின்வருமாறு கூறினார்: “கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்; நாளை இந்நேரத்தில் சமாரியாவின் வாசலிலே ஒரு மரக்கால் கோதுமை மா ஒரு சேக்கலுக்கும், இரண்டு மரக்கால் வாற்கோதுமை ஒரு சேக்கலுக்கும் விற்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்” என்றான் (வசனம் 1). “ஒரு மரக்கால் கோதுமை மா” என்பது ஏறக்குறைய ஆறு ராத்தலைக்குறிக்கும். “இரண்டு மரக்கால் வாற்கோதுமை” என்பது அரை புஷெல் அளவை (4 காலன்) குறிக்கும். குறிப்பிடப்பட்டுள்ள விலைகள் பட்டணம் முற்றுகை இடப்படுவதற்கு முன்பு இருந்த விலையை விட சற்று கூடுதலானதாக இருந்தது. எலிசா ஆறுராத்தல் மெல்லிய கோதுமை மா என்ன விலைக்கு விற்கப்படும் என்று எலிசா கூறினாரோ, அதைவிட* எட்டுமடங்கு *அதிக விலைக்கு ஒரு கழுதை தலை தற்போது விற்பனையாகிக் கொண்டிருந்தது*

*(6:25; 7:1)! தீர்க்கதரிசியின் கூற்றுப்படி நடப்புச் சூழ்நிலையில், இந்த தத்துரூப மான மாற்றம் ஒரு இருபத்திநான்கு மணி நேரத்தில் நடைபெறும்!*

*இது ஒரு ஆச்சரியமான தீர்க்கதரிசனம், ஒரு தைரியமான முன்னுரைப்பு. எதிரி இன்னமும் பட்டணத்தை முற்றுகை போட்டுள்ளான்; பட்டினியால் வாடின குழந்தைகள் உணவுக்காக கதறிக்கொண்டிருந்தன. ஒரு மனிதன் கண்ணோக்கிப்பார்க்கும் போது, எலிசாவின் வார்த்தைகள் நிறைவேறுவதற்கு எந்த ஒரு வழியும் இருக்கவில்லை. பர்ட்டன் கேப்மேன் என்பவர், "நிறைவேறுவதற்கு சாத்தியமே இல்லாத ஒரு தீர்க்கதரிசனம் எப்போதாவது இருந்ததென்றால், அது இதுவாகத்தான் இருக்கவேண்டும்" என எழுதினார்![15]*

*ராஜாவுடன் வந்திருந்த பிரதானி, "இதோ, கர்த்தர் வானத்திலே மதகுகளை உண்டாக்கினாலும் இப்படி நடக்குமா?" என பரிகாசம் செய்தான் (7:2ஆ). அவனுடைய வார்த்தையை விரித்து கூறியிருந்தால், "தேவன் நோவாவின் நாட்களில் செய்தது போல், [ஒப்பிடுக ஆதியாகமம் 7:11] வானத்தின் மதகுகளை திறந்து, மழைக்கு பதிலாக தானியத்தை கீழே கொட்டினாலும், இப்படி ஒரு காரியம் நடக்காது!" என இருந்திருக்கும். மனிதன் தன் வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் இது ஒன்றாக இருக்கிறது. பிரதானியானவன், தீர்க்கதரிசியின் வார்த்தைகள் எப்படி நிறைவேறும் என தர்க்கித்தது மட்டுமல்லாமல், தேவனுடைய வல்லமையை குறித்த சந்தேகத்தையும் தெரியப்படுத்தக் கூடியவனாக இருந்தான். "தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே!" என இயேசு கிறிஸ்து கூறிய வார்த்தைகள் இந்த மனிதனுக்கு பொருந்தக்கூடும் (லூக்கா 24:45).*

*எலிசா சந்தேகப்பட்ட அந்த மனிதனை நோக்கி, ''உன்னுடைய கண்களினாலே அதை காண்பாய்; ஆனாலும் அதிலே சாப்பிடமாட்டாய்'' என்றான் (2 இராஜாக்கள் 7:2ஆ) - ''நிறைவேறுவதற்கு கடினமாய் காணப்பட்ட ... வேறு ஒரு தீர்க்கதரிசனமாக ... இது இருந்தது.''[16] அந்த சந்தர்ப்பத்தில், ராஜாவும் பிரதானியும் அங்கிருந்து சென்றிருக்க வேண்டும். ராஜா சந்தேகப்படக்கூடியவனாக இருந்தான், ஆனாலும் என்ன நடக்கப்போகிறதென்பதை பார்க்க அவன் ஒரு நாள் காத்திருக்க விரும்பினான். பிரதானி, "காண்பேன், சாப்பிடமாட்டேனா ... காண்பேன், ஆனால் சாப்பிட மாட்டேனா ... இந்த கிறுக்கு கிழவன் என்ன தான் சொல்கிறான்? ஒன்றும் விளங்கவில்லையே" என முணுமுணுப்பதை நான் பார்க்கிறேன்.*

**வாக்குறுதிகள் நிறைவேறின**

*எலிசாவின் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறுவது எப்படி சாத்தியமா யிருக்கும்? எஞ்சியுள்ள கதை அதைத் தான் விவரிக்கிறது. வசனம் 3இன் காட்சி சமாரியா பட்டணத்தின் வாசலுக்கு வெளியே மாற்றியமைக்கப்படுகிறது. "குஷ்டரோகிகளான நாலுபேர் ஒலிமுக வாசலில் இருந்தார்கள்; அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி: நாம் இங்கே இருந்து சாகவேண்டியது என்ன?" என பேசிக்கொண்டார்கள் (வசனம் 3). இறுதியாக, அவர்கள் எதிரியின் இரக்கத்தை நாடுவது என தீர்மானித்தார்கள் (வசனம் 4). அவர்கள் எதிரியின் முகாமுக்கு சென்றார்கள், ஆனால் அவர்கள் ஆச்சரியப்படத்தக்கதாக அது வெறுமை யாயிருக்கக் கண்டார்கள் (வசனம் 5).*

> ஆண்டவர் சீரியரின் இராணுவத்திற்கு இரதங்களின் இரைச்சலையும், குதிரைகளின் இரைச்சலையும், மகா இராணுவத்தின் இரைச்சலையும் கேட்கப் பண்ணினதினால், அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி: "இதோ, நம்மிடத்தில் போருக்கு வர, இஸ்ரவேலின் ராஜா ஏத்தியரின் ராஜாக்களையும் எகிப்தியரின் ராஜாக்களையும் நமக்கு விரோதமாகக் கூலி பொருத்தினான் ..." (வசனம் 6).

சீரியா இராணுவத்தினர் எல்லாவற்றையும் விட்டு, தப்பி ஓடிப்போனார்கள் (வசனம் 7). குஷ்டரோகிகள் ஆள் அரவமில்லாத முகாமை கண்டபோது அதிக சந்தோஷப்பட்டார்கள். அவர்கள் புசித்து திருப்தியடைந்து, பாளையத்தை கொள்ளையிட துவங்கினார்கள் (வசனம் 8). பின்பு, அவர்கள் மனசாட்சியில் உணர்த்தப்பட்டு (வசனம் 9), வாயிற்காவலர்களிடத்தில்போய் எதிரிகள் வெளியேறிப்போயிருந்தார்கள் என்பதை அறிவித்தார்கள் (வசனம் 10). செய்தி ராஜாவுக்கு எட்டியது (வசனம் 11). முதலில் அவன் நம்பவில்லை (வசனம் 12); ஆனால் அவன் அது உண்மையாய் நடந்தது என்பதை உறுதிசெய்து கொண்டான்; எதிரி ஓடிப்போய்விட்டான் (வசனங்கள் 13-15)!

செய்தி வேகமாய் பரவியது மற்றும் வாயிற்கதவுகள் திறக்கப்பட்டன. மக்கள் பட்டணத்திற்கு வெளியே வெள்ளமென திரண்டு, முகாமை கொள்ளையிட்டார்கள் (வசனம் 16அ). எலிசா கூறியபடியே ஒரு மரக்கால் கோதுமை மா ஒரு சேக்கலுக்கும், இரண்டு மரக்கால் வாற்கோதுமை ஒரு சேக்கலுக்கும் விற்கப்படும் அளவிற்கு முகாமில் பொருட்கள் விட்டுச் செல்லப் பட்டிருந்தன (வசனம் 16ஆ).

சந்தேகப்பட்ட அந்த பிரதானி விலைமலிவான உணவை காண்பான், ஆனால் அதை உண்ணமாட்டான் என்பது பற்றிய தீர்க்கதரிசனத்தைப் பற்றி என்ன? எதிரி இராணுவ முகாமை விட்டு ஓடி போயிருந்ததை மக்கள் கேள்விப்பட்டுள்ள நிலையில், கட்டுங்கடங்காத கூட்டம் அங்கு கூடும் என்பதை ராஜா எதிர்பார்த்தார். ஆகவே, ராஜா "அந்தப் பிரதானியை ... ஒலிமுகவாசலில் விசாரிப்பாயிருக்கக் கட்டளையிட்டிருந்தான்" (வசனம் 17அ). அந்த பிரதானி இதை ஒரு பெருமைக்குரியதாக கருதினான். அங்கே அவன் தன்னுடைய ஜொலிக்கிற கச்சைகளை கட்டிக்கொண்டு, நுழைவாயிலில் நின்று கொண்டு, தன் கையை உயர்த்தி, "ஒழுங்கை கடைப்பிடியுங்கள், ஓடவேண்டாம், நடந்து செல்லுங்கள்" என கூறுவதை நான் காட்சிப்படுத்துகிறேன். அவன் தன் குரலை உயர்த்தி: "ஒழுங்காகச் செல்லுங்கள்! அவசரமாக ஓடவேண்டிய அவசியமில்லை! எல்லாருக்கும் போதுமான உணவுப் பொருள் கிடைக்கும்!" என கூறுவதை நான் கேட்கிறேன். மக்கள் முண்டியடித்து அவனை மிதித்துக்கொண்டு சென்றபோது, அவன் மூர்க்கமாக கைகளை அசைத்து பதட்டத்தில், "வரிசையாக! வரிசையாக! வரி ..." என கூறுவதை நான் கேட்கிறேன். "ஒலிமுகவாசலிலே ஜனங்கள் அவனை நெருங்கி மிதித்ததினாலே ..." என்று வசனம் கூறுகிறது (வசனம் 17ஆ). தீ விபத்து மற்றும் இதர ஆபத்துக்களின்போது மக்கள் மோதியடித்துக்கொண்டு ஓடுவது தொடர்பான செய்திகளை நான் கேள்விப்பட்டுள்ளேன்.

இப்படியாக "... ராஜா தேவனுடைய மனுஷனிடத்தில் வந்தபோது சொல் லியிருந்தபடியே, அவன் செத்துப்போனான்" (வசனம் 17இ). "தேவனுடைய மனுஷன் ... சொல்லியிருந்தபடியே" என்ற வார்த்தைகளை அடிக்கோடிடுங்கள்.

சந்தேகப்பட்டவன் உணவைக் காண்பான், ஆனால், அதை புசிக்கமாட்டான் என எலிசா கூறியிருந்தார், அது துல்லியமாக அப்படியே நடந்தது. சத்தியத்தைக் குறித்து சந்தேகப்படுவது, சத்தியத்தை மாற்றியமைப்பதில்லை; அது இன்னமும் சத்தியமாகவேயிருக்கிறது.

சிலர் சத்தியத்திற்கு கீழ்ப்படிவதை காட்டிலும், அதைக் குறித்து ஏளனம் செய்வது சுலபமாயிருப்பதாக காண்கிறார்கள். வேதாகமம், இஸ்ரவேலர்கள் ஏன் பாபிலோனிய அடிமைத்தனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள் என்பதை பற்றி கூறும்போது, "ஆனாலும் அவர்கள் தேவனுடைய ஸ்தானாதிபதிகளைப் பரியாசம்பண்ணி, அவருடைய வார்த்தைகளை அசட்டை செய்து, அவருடைய தீர்க்கதரிசிகளை நிந்தித்தபடியால், கர்த்தருடைய உக்கிரம் அவருடைய ஜனத்தின் மேல் மூண்டது; சகாயமில்லாமல் போயிற்று" என கூறியது (2 நாளாகமம் 36:16). புதிய ஏற்பாட்டில், பேதுரு, "... கடைசி நாட்களில் பரியாசக்காரர் வந்து, தங்கள் சுய இச்சைகளின்படியே நடந்து ..." என எழுதினார் (2 பேதுரு 3:3). சந்தேகப் பேர்வழிகள், உயிர்த்தெழுதல் துவங்கி (காண்க நடபடிகள் 17:32), கர்த்தருடைய இரண்டாம் வருகைவரை உள்ள ஒவ்வொரு வேதாகம சத்தியங்களையும் பரியாசம் செய்திருக்கிறார்கள் (காண்க 2 பேதுரு 3:3, 4).[17]

தேவனுடைய வார்த்தைகளை பரியாசம் செய்கிறவர்கள். தங்களை புத்தி சாலிகள் என கருதுகிறார்கள், ஆனால் வேதாகமம் அவர்களை "மதிகேடர்கள்" என அழைக்கிறது (காண்க நீதிமொழிகள் 14:9). சந்தேகப்படுகிறவர்களின் உறுதியற்ற தன்மையை குறித்து யாக்கோபு, "... சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்" என எழுதினார் (யாக்கோபு 1:6ஆ). முடிவில், தேவனானவர் பரியாசக்காரர்களை பரியாசம் பண்ணுவார் (காண்க நீதிமொழிகள் 3:34). ஒருவன் தேவன் மற்றும் அவருடைய வார்த்தைகளை பரியாசம் செய்து விட்டு, அதன் பின்விளைவுகளை அனுபவிக்காமல் தப்பிக்கொள்ள இயலாது (காண்க கலாத்தியர் 6:7, 8)!

வேதாகமம் ஒரு சத்தியத்தை போதிக்கும்போது, அதை *விசுவாசியுங்கள்* நீங்கள் அதை முழுமையாக புரிந்து கொள்ளாவிட்டாலும், அதை விசுவாசியுங்கள். மனித ஆய்வறிவுக்கு அது எதிராக செல்லக்கூடியதாக காணப்பட்டாலும், அதை விசுவாசியுங்கள் (காண்க ஏசாயா 55:8, 9). சத்தி யத்தை குறித்து சந்தேகப்படுவது, சத்தியத்தை ஒருபோதும் மாற்றியமைப் பதில்லை; அது தொடர்ந்து சத்தியமாகவே இருக்கிறது.

## "சத்தியம் சத்தியமாக, சத்தியமாக சத்தியமாகவே இருக்கிறது" (7:18-20)

இங்கே கதை முடிந்துவிடுவது போல தோன்றலாம், ஆனால் ஏவப்பட்ட எழுத்தாளர் இன்னமும் அதை முடிக்கவில்லை.

> "இரண்டு மரக்கால் வாற்கோதுமை ஒரு சேக்கலுக்கும் ஒரு மரக்கால் கோதுமை மா ஒரு சேக்கலுக்கும், நாளை இந்நேரத்திலே சமாரியாவின் ஒலிமுகவாசலில் விற்கும் என்று தேவனுடைய மனுஷன் ராஜாவோடே சொன்னதின்படியே நடந்தது" அதற்கு அந்த பிரதானி தேவனுடைய மனுஷனுக்கு பிரதியுத்தரமாக: "இதோ, கர்த்தர் வானத்திலே மதகுகளை உண்டாக்கினாலும், இந்த வார்த்தையின்படி நடக்குமா என்று சொல்ல;"

*இவன், "இதோ, உன்னுடைய கண்களினாலே அதை காண்பாய், ஆனாலும் அதிலே சாப்பிடமாட்டாய் என்றானே." அந்தப் பிரகாரம்தானே அவனுக்கு நடந்தது; ஒலிமுகவாசலிலே ஜனங்கள் அவனை நெருங்கி மிதித்ததினாலே அவன் செத்துப்போனான் (வசனங்கள் 18-20).*

*முகவுரையில் குறிப்பிட்டபடி, வாசகர்கள் இந்த கதையின் மையகருத்தை பெற தவறிவிடக்கூடாது என எழுத்தாளர் விரும்பினார். ஆகவே, அதின் உச்சக்கட்ட காட்சியை திரும்ப கூறியுள்ளார் (ஒப்பிடுக வசனங்கள் 16, 18). இதில் கவனிக்க வேண்டிய மிகவும் முக்கியமான வார்த்தைகள் "தேவனுடைய மனுஷன் ... சொல்லியிருந்தபடியே அவன் செத்துப்போனான்" (வசனம் 18; காண்க வசனம் 17இ). ஒரு தீர்க்கதரிசி தேவனுடைய வார்த்தையை பேசுகிறாரா அல்லது அவர் ஒரு கள்ளத்தீர்க்கதரிசியா என்பது அவர் உரைத்த தீர்க்கதரிசனங்கள் நிறைவேறுகிறதா இல்லையா என்பதின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது (உபாகமம் 18:21, 22). எலிசாவின் தீர்க்கதரிசனங்கள் துல்லியமாக நிறைவேறின. தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை விசுவாசிப்பது ராஜாவுக்கு கடினமாக காணப்பட்டது - மற்றும் - பிரதானி அவைகளை பரியாசம் செய்தான் - இருப்பினும் அவைகள் துல்லியமாக நிறைவேறின.*

*ஒரு கவிஞர் ஒரு சமயம், "ரோஜா மலர் ஒரு ரோஜா மலராக ஒரு ரோஜா மலராகத்தான் இருக்கிறது" என எழுதினார்.[18] இந்த வார்த்தைகளிலிருந்து நாம் எந்த கருத்தையும் பெறாவிட்டாலும், ஒரு ரோஜாமலர், ரோஜாமலராகவே இருக்கிறது என்ற உண்மை நமக்கு சரியாகப்படுகிறது. கவிஞரின் வார்த்தைகளை நம்முடைய தலைப்புக்கு பொருத்தி, "சத்தியம் சத்தியமாக, சத்தியமாக சத்தியமாகவே இருக்கிறது" என நாம் கூறலாம். அறிவீனம் அதை அசட்டை செய்யலாம், கோபம் அதை வெறுத்து ஒதுக்கலாம், சந்தேகம் அதை ஏளனம் செய்யலாம் - ஆனால் சத்தியம் இன்னமும் சத்தியமாகவே இருக்கிறது! சத்தியம் சூரிய வெளிச்சத்தை போன்றது: ஒரு மேகம் அதை மறைக்கலாம். இரவு அது இல்லாமல் போய்விட்டது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தலாம், ஒரு விழியற்றவரால் அதை பார்க்க முடியாது - ஆனால் அது இன்னமும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது, ஏனெனில் சூரிய வெளிச்சம் எப்போதும் சூரிய வெளிச்சமாகவே இருக்கிறது.*

*ஒரு விரும்பத்தகாத குணாதிசயத்தையுடையவனாயிருந்த பிலேயாம் ஒரு முறை சத்தியத்தை பேசினான்: "பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா?" (எண்ணாகமம் 23:19). தேவனானவர் தமது வார்த்தையில் எதையாவது சொல்லும்போது, அதை விசுவாசியுங்கள். சத்தியத்தை விசுவாசித்திருந்தால், அது சிறப்பானதாக இருந்திருக்கும் என்பதை பிரதானி கண்டுபிடித்ததுபோல, அதை விசுவாசியுங்கள் - ஏனெனில் "சத்தியம் சத்தியமாகவே இருக்கிறது, சத்தியம் சத்தியமாகவே இருக்கிறது."*

## முடிவுரை

*இந்தப் பாடத்தொடரின் இரண்டாவது பகுதியில் எலியாவின் செய்தி இரண்டு மடங்காக இருந்தது என்பதை வலியுறுத்திக் கூறியிருந்தோம்:*

- தேவன், அவருடைய செய்தியாளர் மற்றும் அவருடைய செய்தியை மதித்து நட - நீ ஆசீர்வதிக்கப்படுவாய்.
- தேவன், அவருடைய செய்தியாளர் மற்றும் அவருடைய செய்தியை மதித்து நடக்க தவறினால் - நீ சபிக்கப்படுவாய்.

இந்தப் பாடத்தில், செய்தியின் இரண்டாம் பகுதியாக தேவன் மற்றும் அவருடைய செய்தியாளரை மதிக்க தவறினால் ஏற்படும் பின்விளைவுகளின் தெளிவான மற்றும் பயங்கரமான செயல்விளைவைப் பார்த்தோம். நாம் இதை சமாரிய குடிமக்கள் அனுபவித்த துன்பங்களில் பொதுவாகவும், எலிசாவின் வார்த்தைகளை ஏளனம் செய்த பிரதானிக்கு ஏற்பட்ட சோகமுடிவில் குறிப்பாகவும் பார்த்தோம். இந்தப் பாடத்தை நாம் நிறைவு செய்கிற வேளையில், தேவனுடைய வசனத்தின் சத்தியத்தைப் பொருத்தவரையில், *உங்கள்* நிலைப்பாடு என்ன என்பதை உங்களை *நீங்களே* வினவிக்கொள்ளுங்கள்: நீங்கள் தேவனுடைய வசனத்தை மதிக்கிறீர்களா, அதை விசுவாசிக்கிறீர்களா மற்றும் அதற்கு கீழ்ப்படிகிறீர்களா? அல்லது தேவனுடைய வசனத்தை மதிக்காதிருக்கிறீர்களா, அதை ஏளனம் செய்கிறீர்களா மற்றும் அதற்கு கீழ்ப்படிய தவறுகிறீர்களா? ஒரு புத்திமான் மற்றவர்களுடைய அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்கிறான். சமாரியா முற்றுகையின் கீழ் இருப்பதை கவனியுங்கள் மற்றும் இப்போதே மனந்திரும்பி தேவனிடம் வர தீர்மானியுங்கள்!

---

குறிப்புகள்

[1]W. J. Deane and S. T. Taylor - Taswell, "Proverbs," *The Pulpit Commentary,* vol. 9, *Proverbs, Ecclesiastes, Song of Solomon,* ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 443. [2]Josephus *Antiquities* 9.4.4. [3]இந்த தகவல் என்னுடைய NIV மொழிபெயர்ப்பின் அடிக்குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டது. நீங்கள் உங்கள் பகுதியில் விலையுயர்ந்த உலோககங்களை கையாளுகிறவர்களிடத்திலிருந்து வெள்ளியின் தற்கால மதிப்பைத் தெரிந்து கொள்ளலாம். [4]இந்த தகவல் என்னுடைய NASB மொழிபெயர்ப்பு வேதாகமத்தின் அடிக்குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டது. [5]Josephus *Wars* 5.13.7. [6]C. F. Keil and F. Delitzsch, "1 and 2 Kings," *Commentary on the Old Testament,* vol. 3, *1 and 2 Kings, 1 and 2 Chronicles, Ezra, Nehemiah, Esther* (Peabody, Mass.: Hendrickson Publishers, 1989), 328. புறாக் கழிவுகளுக்கான இதர சாத்தியக் கூறுகள் ஆலோசிக்கப்படுகின்றன. விலங்கு கழிவுகளில் பொதுவாக சீரணிக்காத சில உணவுப் பகுதிகள் உள்ளன. ஒருவேளை அதை தோண்டிப் பார்த்து அந்த உபயோகமான பகுதிகளை கண்டுபிடிப்பது நோக்கமாக இருக்கலாம் அல்லது கழிவுகள் எரிபொருளாக உபயோகிக்க விலைக்கு வாங்கப்பட்டது. [7]இந்த அவபக்தியான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்னரே, அந்த இரண்டு பிள்ளைகளும் ஊட்டச்சத்து குறைவால் இறந்து போயிருக்க வாய்ப்பு இருந்தது, இருப்பினும் அது திகிலூட்டக்கூடிய கதையாக இருக்கிறது. [8]Josephus *Wars* 6.3.4. [9]ஆஸ்திரேலியாவில் இந்த வகை பொருள் "கெசியன்" என அழைக்கப்படுகிறது. நமது பகுதியில் இது சணல் பை அல்லது கோனிப் பை என அழைக்கப்படுகிறது. [10]G. Rawlinson, "2 Kings," *The Pulpit Commentary,* vol. 5, *1 and 2 Kings,* ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eermans Publishing Co., 1950), 125.

[11]Matthew Henry, *Commentary on the Whole Bible,* ed. Leslie F. Church (Grand Rapids,

Mich.: Zondervan Publishing House, 1961), 408. [12]*யோராம் தன் மனதை மாற்றிக்கொண்டு, கொலைகாரனுக்கு கொடுத்த உத்தரவை மாற்றியமைக்க அவன் பிறகே விரைந்து சென்றான் என பல எழுத்தாளர்கள் கருதுகிறார்கள். ஆனால் ராஜாவின் இருதயத்தில் எந்த மாற்றமும் ஏற்பட்டதற்கான எந்த அறிகுறியையும் நான் காணவில்லை. யோராமின் இருதயத்தை அறிந்திருந்த எலிசா ராஜா தன் வீட்டை நெருங்கி வருகையில் அவனை "அந்த கொலைபாதகனுடைய மகன்" என அழைத்தார் (2 இராஜாக்கள் 6:32).* [13]Keil and Delitzsch, 329. [14]*பல மொழிபெயர்ப்புகளில் "செய்தியாளர்" என்பதற்கு பதிலாக "ராஜா" என்றுள்ளது (காண்க* RSV; REB; NLT; TEV*) "செய்தியாளர்" மற்றும் "ராஜாவை" குறிப்பதற்கான எபிரேய வார்த்தை ஒரேவிதமாக இருக்கிறது.* [15]James Burton Coffman and Thelma B. Coffman, *Commentary on Second Kings,* James Burton Coffman Commentaries, The Historical Books, vol. 6 (Abilene, Tex.: A.C.U. Press, 1992), 87. [16]Ibid., 88. [17]*நீங்கள் வாழும் பகுதியில் எந்த வேதாகம சத்தியங்களை மக்கள் ஏளனம் செய்கிறார்களோ மற்றும் சந்தேகிக்கிறார்களோ, அவைகளை பயன்படுத்தவும்.* [18]Gertrude Stein (1874-1946), *Sacred Emily* (1913); quoted in John Bartlett, *Bartlett's Familiar Quotations,* 16th ed., ed. Justin Kaplan (Boston: Little, Brown, and Co., 1992), 627.